செய்தி வெளியீடு எண்: 157 நாள் : 10.03.2016

# செய்தி வெளியீடு

## 08.03.2016 அன்று விதிமீறி எடுத்துச்செல்லப்பட்ட ரூ.10 லட்சம் மதிப்பிலான கஞ்சா மற்றும் வாகனம், மதுவகைகள் மற்றும் 13 லட்சம் ரொக்கம் பறிமுதல் – இதுவரை ரூ.37,98,530 பறிமுதல் – தேர்தல் பறக்கும் படை நடவடிக்கை

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. இதனை கண்காணிப்பதற்காக பறக்கும்படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழு ஆகியவற்றை தலைமை தேர்தல் அலுவலர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அமைக்கப்பட்ட பறக்கும் படையினர் (Flying Squads) தேர்தல் நடத்தை விதிமீறல்கள், மிரட்டல், அச்சுறுத்தல், சமூக விரோத சக்திகள், பெருமளவிலான ரொக்க நடமாட்டம், ஆயுத நடமாட்டம் போன்ற புகார்களை கவனித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், ஒரு நிர்வாக மாஜிஸ்ரேட்டு மூன்று காவல்துறை பணியாளர்களைக் கொண்ட நிலையான கண்காணிப்புக் குழுவினர் (Static Surveillance Team) சட்டத்திற்கு விரோதமாக நடவடிக்கைகள், சமூக விரோத சக்திகளின் நடமாட்டம் ஆகியவற்றை கண்காணிப்பதோடு கண்காணிப்புக் கேமரா அல்லது வீடியோ மூலம் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள், மதுவகைகள் தருவது, ஆள் பலத்தை பயன்படுத்துவது, போன்ற சட்டத்துக்குப் புறம்பான செயல்களை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள பறக்கும் படை உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்படும் பணம், நகை, பரிசுபொருட்கள் போன்றவற்றை ஆய்வு செய்து முறையான ஆவணங்கள் இல்லாமல் இருந்தால் அப்பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர். உரிய ஆவணங்கள் காட்டியப்பின் விசாரணைக்குப் பின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் 08.03.2016 அன்று 18 புகார்கள் பெறப்பட்டதில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கோயமுத்தூர், நீலகிரி, திருப்பூர், விருதுநகர், மதுரை ஆகிய மாவட்டங்களில் எடுத்துச்செல்லப்பட்ட ரூ.13 லட்சம் ரொக்கப்பணம் ரூ.20,000 மதிப்பிலான வெடிமருந்து தயாரிக்க உதவும் வெள்ளை பாஸ்பரஸ், கலர் பாஸ்பரஸ், அலுமினியத்தூள், வெள்ளித்துள் போன்ற தடைசெய்யப்பட்ட மூலபொருட்கள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 30,330 மி.லி அயல்நாட்டு மதுவகைகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பொது இடத்தில் கட்சி பேனர், கட்சி கொடிகள் ஆகியவை வைத்தது அவற்றை அகற்றாமல் பொது மக்களுக்கு இடைஞ்சல் செய்தது, அனுமதியில்லாத இடத்தில் கட்சி அலுவலகம் திறந்தது போன்ற தேர்தல் விதிமீறிய செயல்கள் தொடர்பாக கட்சியினர் மீது பெறப்பட்ட 28 புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விதிமீறி ஆவணங்கள் ஏதுமின்றி எடுத்துச் செல்லப்பட்ட ரூ,25,870 மதிப்புள்ள ஸ்கூல் பேக், 17 ஜாமெட்ரி பாக்ஸ்கள், 65 ஜோடி மிதியடிகள், இராமநாதபுரம் மாவட்டத்தில் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட 100 கிலோ கஞ்சா வாகனத்துடன் பறிமுதல் செய்யப்பட்டன. இதன் மதிப்பு ரூ.10 லட்சம் ஆகும். இதுவரை தேர்தல் விதிமுறை மீறி எடுத்துச்செல்லப்பட்ட ரொக்கப்பணம் ரூ.37,98,530/– பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9